# 2 மெசியாவில் நிறைவான வாழ்வு

**மெசியா தொடர்பான திருவிவிலிய எண்ணக்கருக்கள் மற்றும் பின்னணி இயேசு கிறிஸ்து என்னும் மெசியாவின் ஊடாக எமது வாழ்வு முழுமை அடைய வழிகாட்டும் முறைகளை அறிந்து கொள்ளல் இந்த பாடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.**

**எசாயா 9:1-7, எசாயா 11:1-9**

மெசியா அல்லது (மேசாயா) எனும் சொல் எபிரேய மொழியில் 'மசியாஹ்' எனப்படும். அதன் பொருள் 'அருட்பொழிவு பெற்றவர்' என்பதாகும். இது கிரேக்க மொழியில் 'கிறிஸ்டொாஸ்' என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதிலிருந்து அருட் பொழிவு பெற்றவர் இறைவனின் விசேட பொறுப்புக்களை நிறைவேற்ற அழைக்கப்பட்டுள்ளார் என அறியப்படுகிறது.

### மெசியா எண்ணக்கருவின் அறிவிப்பு

இஸ்ரயேல் வரலாற்றில் அருட்பொழிவு செய்யப்பட்ட ஒரு கூட்டத்தினர் இஸ்ரயேலின் குருக்கள் ஆவர். ஆரோன் மற்றும் அவரது புத்திரர் திருப்பொழிவு செய்யப்பட்டதை வி.ப. 29:7ல் நாம் வாசிக்கலாம். அதே போன்று இறைவாக்கினரும் திருப்பொழிவு பெற்றவர் ஆவர். 1 அரசர் 19:16 இல் இறைவாக்கினரும் அரசரும் திருப்பொழிவு செய்யப்பட்டவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 'நிம்சியின் மகன் ஏகூவை இஸ்ரயேலுக்கு அரசனாக திருப்பொழிவு செய். எலிசாவை உனக்குப் பதிலாக இறைவாக்கினராக அருள்பொழிவு செய்.'

தாவீது அரசன் காலத்தில் அரசர் திருப்பொழிவு செய்யப்பட்டனர். அதற்கேற்ப மெசியா எனும் எண்ணக்கருவில் பின்வரும் விசேட பண்புகள் வெளிப்படுகின்றன.

### அரச தன்மை கொண்ட மெசியா எண்ணக்கருவின் விசேட பண்புகள்

**1. மெசியாவும் தாவீது அரச வழிமரபும் (திருப்பாடல் 89:3-4)**

தாவீதின் வழிமரபில் மெசியா வருகை தருவார் என இறைவாக்கினர் எசாயா முன்னறிவித்தார். அதனால் தாவீது அரசனின் வழிமரபினருக்கு விசேட இடம் உரித்தானது. அதனால் இறைவன் தாவீதைத் தெரிவு செய்து அவருடன் உடன்படிக்கை செய்ய முற்பட்டார். எனவே மெசியாவின் வருகை தாவீது அரச வழிமரபில் முழுமை பெற்றது. (எசாயா 9:7)

இலவச விநியோகத்திற்காக

## 2. சதாகால மெசியா

தாவீதின் வழிமரபு சதாகாலத்துக்குமானது. பல துன்ப துயரங்களின் மத்தியில் தாவீதின் வழிமரபில் தோன்றிய மெசியா இறைவனின் சமாதான ஆட்சியை அமைப்பார்.

## 3. நேர்மையும் நீதியும் நிலைநாட்டல்

மெசியா அரசு ஆளுகை நேர்மையையும் நீதியையும் அடிப்படையாகக் கொண்டு வெளிப்படுத்தப்படுகின்றது. நேர்மையும் நீதியும் சமாதான அரசனின் பிரதான அம் சங்கள் ஆகும்.(எசாயா 11:5)

கிறிஸ்து எனும் மெசியாவின் செயற்பாடுகளை நோக்கும் போது அவர் சாதாரண அரசனைவிட வேறுபட்டவர் என்பதை நாம் திருவிவிலியத்தில் காண்கிறோம். அதாவது அவரது நோக்கம் நிலையான சமாதான அரசை உருவாக்குதல் ஆகும். (எசாயா 9:7)

## 4. நுகத்தை உடைத்தெறிந்து விடுதலை அளித்தல்

இறைவாக்கினர் எசாயாவின் காலத்தில் தென்பகுதியான யூதா அரசுக்கு அசீரியாவினால் அச்சுறுத்தல் காணப்பட்டது. அதனால் இஸ்ரயேல் மக்கள் பெரும் துன்பங்களை எதிர் நோக்கினர். 'மெசியா பற்றிய எதிர்பார்ப்பை மக்களுக்கு கொடுத்த எசாயா, 'அவர் சுமையான நுகத்தை உடைத்து விடுதலையை அளிப்பார்' என்று கூறி ஒரு எதிர்பார்பை மக்களுக்கு ஏற்படுத்தினார். (எசாயா 9:4)

## 5. வியத்தகு ஆலோசகர்

அரசன் எப்போதும் பலத்தால் மட்டுமல்ல ஞானத்தால் நிரப்பப்பட்டவர் என்று திருவிவிலியத்தில் அரசன் எனும் எண்ணக்கரு முன்வைக்கப்பட்டுள்ளது. 'அவர் ஞானத்தால் நிறைவு பெற்றவர். அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர். (எசாயா 9:6) எனவே மெசியா ஞானத்தாலும், ஆலோசனையாலும் தமது மக்களை வழிநடத்துவார்.

## 6. அமைதியின் அரசர்

மக்களின் வாதபேதங்களை நீக்கி அமைதியுடனும் மகிழ்வுடனும் வாழ்தல் ஒரு நாட்டின் எதிர்காலத்துக்கு உதவியாக அமையும். அமைதி என்பது வெளியான பிரச்ச னைகளை நீக்குதல் மட்டுமல்ல. மனித உள்ளங்களில் ஆழமாக உருவாகும் சமாதானம் ஆகும். (எசாயா 9:6) அந்த அரசில் சமாதானத்துக்கு முடிவில்லை (எசாயா 9:7) என்று மெசியா அரசின் சிறப்பு வெளிப்படுகின்றது.

## மெசியா மூலம் கிடைக்கும் ஒளி




இயேசுவின் சீடர்கள் அவர் மெசியா எனப்படும் கிறிஸ்து என அறிந்து கொண்டனர் என்று நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மாற்கு 8:27-30) கிறிஸ்து, தன்னை மானிட மகன் என அடையாளம் கண்டு 'மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்' எனக் கூறினார். (மாற்கு 10:45)

அவரது வாழ்வும் சிலுவைத் தியாக மரணமும் உலகில் வாழும் அனைவருக்கும் பாவத்திலிருந்து விடுதலை பெறவும், அதனால் முழுமையான வாழ்வு பெறவும் வாய்ப்பு வழங்கியது. இந்த முழுமை வாழ்வில் மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையே உறவு புதுப்பிக்கப்பட்டு, பிறருடன் முழுமையான வாழ்வு வாழ்கின்றனர். இவ்வாறான சமாதான அழகிய வாழ்வு எசாயா 11:1-9 வரை அழகாக விபரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, மெசியாவின் வாழ்வின் தியாகத்தால் மனிதன் அனைத்து அடிமைத் தனத்திலிருந்தும் விடுதலை பெறுகின்றான். அதாவது பாவத்திலிருந்து, நோயிலிருந்து, அரசியல், சமூக துன்பங்களிலிருந்து விடுதலை பெறுகின்றனர்.

மெசியாவில் விடுதலை பெறும் விசுவாசிகள் இறையரசின் பெறுமதியை தமது வாழ்வில் எடுத்துக்காட்டுவர். இறைபயம், நீதி, நேர்மை, அர்ப்பணிப்பு, சமாதானம் என்பன இவரது வாழ்வின் நோக்கங்கள் ஆகும். இவ்வாறாக வாழ்பவர் முழுமையான கிறிஸ்தவ வாழ்வை உலகுக்கு வெளிக்காட்டுவர்.

**செயற்பாடு**

01. எசாயா 11:1-9 இல் குறிப்பிட்டுள்ளவாறு மெசியாவின் சமாதான ஆட்சியில் காணப்படும் பண்புகளை வரிசையாக எழுதுக.

02. தற்காலத்தில் மெசியா ஆட்சியின் வருகையின் தடைக்கான காரணிகள் சிலவற்றை குறிப்பிடுக.